செ.வெ.எண்:72 நாள்:29.08.2019

# கரூர் மாவட்டம்

விவசாயத்தில் வேலையாட்கள் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்து, குறித்த காலத்தே பண்ணைப்பயிர் சாகுபடி செய்திட ஏதுவாகவும், விவசாயிகளின் நிகர இலாபத்தினை உயர்த்திடவும் வேளாண்மை இயந்திரமயமாக்கும் திட்டம் தமிழகத்தில் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் பெருமளவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2019-20ஆம் நடப்பு நிதியாண்டில் கரூர் மாவட்டத்தில் தனிப்பட்ட விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வழங்குதல் மானிய விலையில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகைக்கு வழங்கும் மையங்கள் அமைத்தல் முதலான பணிகள் 6.0462 கோடி செலவில் செயல்படுத்தப்பட உள்ளது.

விவசாயிகள் உழவன் செயலில் பதிவு செய்து, மத்திய அரசின் இணையத்தளமான www. agrimachinery.nic.in மூலம் Direct Benefit Transfer (DBT) - ன் வழிமுறைகளின் படி மானியம் பெற்று வருகின்றனர். இதன்படி விவசாயிகளுக்கு அதிகபட்சமாக டிராக்டர்களுக்கு ரூ. 5 இலட்சம், நெல் நாற்று நடவு செய்யும் இயந்திரங்களுக்கு ரூ. 5 இலட்சம், வைக்கோல் கட்டும் இயந்திரங்களுக்கு ரூ. 9 இலட்சம், அறுவடை இயந்திரங்களுக்கு ரூ. 11 இலட்சம், மானியமாக நடப்பு 2019 - 20 ஆம் ஆண்டு வழங்கப்பட உள்ளது. மேலும் பவர் டில்லர், விசைக் களையெடுப்பான், புதர் அகற்றும் கருவி, சுழற்கலப்பை (ரோட்டவேட்டர்), கொத்துக் கலப்பை, விதை விதைக்கும் கருவி, திருப்பும் வசதி கொண்ட கைட்ராலிக் வார்ப்பு இறகுக் கலப்பை, தட்டை வெட்டும் சருவி., நிலக்கடலை தோண்டும் கருவி, பல்வகைப் பயிர் கதிரடிக்கும் இயந்திரம், கரும்பு கட்டை சீவும் கருவி, கரும்பு சோகை துகளாக்கும் கருவி, டிராக்டர் டிரெய்லர், தென்னை ஓலை துகளாக்கும் கருவி முதலானவற்றிற்கும் அவற்றின் மொத்த விலையில் 50 சதவிகிதம் அல்லது அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட அதிகபட்ச மானியத் தொகை இவற்றில் எது குறைவோ, அத்தொகை மானியமாக சிறு, குறு, தாழ்த்தப்பட்ட பழங்குடியின மற்றும் பெண் விவசாயிகளுக்கும், இதர விவசாயிகளுக்கு அவற்றின் மொத்த விலையில் 40 சதவிகிதம் அல்லது அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட அதிகபட்ச மானியத்தொகை, இவற்றில் எது குறைவோ, அத்தொகை மானியமாகவும் வழங்கப்பட உள்ளது.

விவசாயிகளுக்கு அதிகவிலையுள்ள வேளாண் இயந்திரங்களை குறைந்த வாடகைக்கு கிடைக்கும் வகையில், முன்னோடி விவசாயிகள், விவசாய சுய உதவிக் குழுக்கள் மற்றும் தொழில் முனைவோர்களுக்கு ரூ. 25 இலட்சம், மதிப்புடைய வாடகை மையங்கள் அமைக்க 40% அல்லது அதிகபட்சமாக ரூ. 10 இலட்சம், மானியமாக வழங்கப்படும். மொத்த மானியத் தொகையில் பொதுப்பிரிவினருக்கு ரூ. 5 இலட்சமும், ஆதி திராவிட பிரிவினருக்கு ரூ. 3 இலட்சமும் பிடித்தம் செய்து, தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் ”மானிய இருப்பு நிதிக் கணக்கில் (Subsidy Reserve Fund Account)” ஒப்பந்த காலமான நான்கு வருடங்களுக்கு இருப்பில் வைக்கப்படும். மீதித் தொகை பயனாளியின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படும். நான்கு வருடங்களுக்குப் பின் பயனாளிக்கு வழங்கப்பட்ட வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் சரிபார்த்த பிறகு மானிய இருப்புத் தொகை திரும்ப வழங்கப்படும்.

பண்ணை சக்தி குறைவாக உள்ள மாவட்டங்களில் உள்ள கிராமங்களில் 8 உறுப்பினர் கொண்ட விவசாயக் குழுக்களுக்கு ரூ. 10 இலட்சம், மதிப்புடைய வாடகை மையங்கள் அமைக்க 80% அல்லது அதிகபட்சமாக ரூ. 8 இலட்சம் மானியம் வழங்கப்படுகிறது. இதில் நீடித்த நிலையான மானாவாரி இயக்கத் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் உள்ள குழுக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

கரும்பு சாகுபடிக்கேற்ற வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகை மையம் முன்னோடி விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோர் மூலம் ஒவ்வொன்றும் ரூ.150 இலட்சம் மதிப்பீட்டில், 40 விழுக்காடு (அதிகபட்சமாக ரூ. 60 இலட்சம் வரை) மானிய உதவியுடன் நிறுவப்பட்டு, கரும்பு விவசாயிகளுக்கு குறைந் வாடகையில் வழங்கப்படுகிறது.

வேளாண் இயந்திரங்களை மானியத்தில் பெற்றிட முதலாவதாக விவசாயிகள், உழவன் செயலியில் (Uzhavan app) தனது ஆதார் எண்ணுடன் பதிவு செய்திட வேண்டும். பின்னர் அவரது விண்ணப்பம் மத்திய அரசின் இணைய தளமான “ www.agrimachinery.nic.in” - ல் இணைக்கப்படும். விவசாயிகள் தங்களுக்குத் தேவைப்படும் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளையும், ஒப்புதல் வழங்கப்பட்ட முகவரையும் (Dealer) தங்களது சுயவிருப்பத்தின் அடிப்படையில் தேர்வு செய்யலாம். மேற்படி இணையதளத்தில் விவசாயி தனக்கு தேவையான வேளாண் இயந்திரங்கள் அல்லது கருவிகளின் முகவரை தேர்வு செய்திட வேண்டும். இவ்வாறாக 15 நாட்களுக்குள் உரிய முகவரை தேர்வு செய்யாத பட்சத்தில் அவரின் விண்ணப்பம் தானாகவே ரத்தாகிவிடும். விவசாயிகள், முகவரின் விற்பனை விலையை பேச்சுவார்த்தை மூலம் பேரம் பேசி குறைத்திடலாம். குறைக்கப்பட்ட விலைக்குரிய மானியம் இணையதளத்திலேயே கணக்கிடப்படும். குறிப்பிட்ட வேளாண் இயந்திரங்கள் / கருவிகளின் இலக்கு முடிவுற்ற பின்னர் விவசாயிகள் அதே இயந்திரம் அல்லது கருவியை தேர்வு செய்தால், அவரது விண்ணப்பம் 1,2,3 என எண்ணிடப்பட்டு காத்திருப்போர் பட்டியலில் சேர்க்கப்படும். ஏற்கனவே 2018 -19 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மூதுரிமை விண்ணப்பங்கள் நடப்பு ஆண்டில் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. எனவே இவ்வாண்டிற்கு விண்ணப்பங்கள் புதிதாக பதிவு செய்யப்பட வேண்டும். ஒரு நிதியாண்டில் தனக்குத் தேவைப்படும் ஏதாவது இரண்டு வேளாண் இயந்திரங்கள் அல்லது கருவிகளை மட்டுமே மானிய விலையில் விவசாயிகள் வாங்கிட இயலும். அடுத்த 10 ஆண்டுகளுக்கு பின்னர்தான் அதே வகையான வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை மானிய விலையில் வாங்கிட இயலும். உதவி செயற்பொறியாளர்(வே.பொ), உதவிப் பொறியாளர் (வே.பொ)/இளநிலைப்பொறியாளர்(வே.பொ), ஆகியோர் விவசாயிகளின் நிலத்திற்கு நேரில் சென்று விவசாயிகள் வாங்கிய வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை ஆய்வு செய்வர்.

மேலாய்வு செய்த அறிக்கை மற்றும் சரிபார்ப்பு பட்டியல் (Check Slip) மற்றும் அலுவலரின் குறிப்புரையும் 10 நாட்களுக்குள் வேளாண்மை பொறியியல் துறை அலுவலர்களால் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும். மேற்குறிப்பிட்ட ஆய்வுகள் அனைத்தும் முடிந்த பின்னர், இறுதியாக விவசாயியின் வங்கி கணக்கில் உரிய மானியமானது ஆய்வு முடிந்த 10 நாட்களுக்குள் வரவு வைக்கப்படும்.

வேளாண் இயந்திரமயமாக்கும் திட்டத்தில் தனிப்பட்ட வேளாண் இயந்திரங்களை விவசாயிகள் மானியத்தில் பெற்றிட ஏதுவாக 95 எண்கள் டிராக்டர், 29 எண்கள் பவர்டில்லர், 3 எண்கள் வைக்கோல் கட்டு கட்டும் கருவி, 12 எண்கள் விசைக் களையெடுப்பான், 10 எண்கள் கொத்துக்கலப்பை, 55 எண்கள் ரோட்டவேட்டர், 6 எண்கள் புதர் அகற்றும் கருவி, 1- எண் தென்னை ஓலை துகளாக்கும்

கருவி, 21 எண்கள் வாடகை மையங்கள் அமைக்க ரூ.186 இலட்சங்களும் இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் விவரங்களுக்கு கரூர் உபகோட்ட அலுவலக உதவி செயற்பொறியாளர்(வே.பொ), திரு. க. சக்திவேல் அவர்களின் அலைபேசி எண் 9443567583 மற்றும் குளித்தலை உபகோட்ட அலுவலக உதவி செயற்பொறியாளர்(வே.பொ), திரு. இரா.அசோகன் அவர்களின் அலைபேசி எண் 9443547210 - ஐ தொடர்பு கொள்ள அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

<u>விவசாயிகள் அணுக வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி எண்:</u>

செயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை, 107, நவலடியான் காம்ப்ளெக்ஸ், அண்ணாநகர், மில்கேட், தாந்தோணிமலை அஞ்சல், கரூர் - 639 005.

தொலைபேசி எண்: 04324 255850

உதவி செயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை, 77/1, ராமச்சந்திரா காம்ப்ளக்ஸ், முதல் தளம், கருப்பக்கவுண்டன்புதூர் பசுபதிபாளையம் அஞ்சல், கரூர் - 639 004.

உதவி செயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை, 20-G4 பரிசல் துறை ரோடு, பெரியபாலம், குளித்தலை ___ 639 104.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.